# மெட்ரோவில் 1 லட்சம் பேர் பயணம்

**சென்னை, ஜூலை 3–**

மெட்ரோ ரயிலில், நேற்று முன்தினம், 1 லட்சம் பேர், பயணம் செய்துள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் தினமும், 87 ஆயிரத்தில் இருந்து, 99 ஆயிரம் பயணியர் வரை, பயணம் செய்கின்றனர்.



விரைவான, பாதுகாப்பான, சொகுசான பயண வசதிகள் செய்யப்பட்டிருந்தும், கடந்த ஏப்ரலில், ஒரு நாள், 1.01 லட்சம் பேர் பயணம் செய்தனர். அதன் பின், 1 லட்சத்தை தொடவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்த ரயிலில், பயணியர் வருகை அதிகம் இருந்தது. இரு வழியில் இயக்கப்பட்ட ரயில்களிலும், 1 லட்சத்து, 6,460 பேர் பயணம் செய்தனர்.

இது குறித்து, மெட்ரோ ரயில் பயணியர் கூறும்போது, 'நேற்று முன்தினம் காலை முதல், மதியம் வரை, சென்னையில், மாநகர போக்குவரத்து ஊழியர்கள், திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால், பஸ்கள் இயக்கப்படவில்லை. இதனால், பயணியர், மெட்ரோ ரயில்களை நாடியதால், ரயிலில் பயணியர் வருகை அதிகம் இருந்தது' என்றனர்.